# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2004 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டம்

---

(2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2004, சனவரி மாதம் 23 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2004 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. 65/2002
4731

## 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் நச்சுத்தன்மை வாய்ந்த, வெடிக்குமியல்புள்ள அல்லது உணர்ச்சியிழக்கச் செய்யும் பதார்த்தத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நச்சுத் தன்மை வாய்ந்த, வெடிக்குமியல்புள்ள அல்லது உணர்ச்சியிழக்கச் செய்யும் பதார்த்தத்தை (டைனமைற் உள்ளடங்கலாக)" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :—

"(ஆ) பந்தி (அ) வில் குறிப்பிட்டு செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் நோக்கத்துக்காக, ஏதேனும் நச்சுத் தன்மை வாய்ந்த, வெடிக்கும் இயல்புவாய்ந்த அல்லது உணர்ச்சியிழக்கச் செய்யும் பதார்த்தத்தை (டைனமைற்

உள்ளடங்கலாக) அல்லது வேறு கெடுதி அல்லது தீங்கு விளைவிக்கும் பண்டத்தை, மீன்பிடி வலையில்லாத) அல்லது ஏதேனும் பதார்த்தத்தைக் கொண்டு செல்லுதலோ அல்லது தனது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது. அத்துடன்

(2) அப்பிரிவின் 2 ஆம், 3 ஆம் உட்பிரிவுகளில் "நச்சுத் தன்மை வாய்ந்த வெடிக்குமியல்புள்ள அல்லது உணர்ச்சி இழக்கச் செய்யும் பதார்த்தத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நச்சுத் தன்மை வாய்ந்த வெடிக்குமியல்புள்ள அல்லது உணர்ச்சி இழக்கச் செய்யும் பதார்த்தத்தை (டைனமைட் உள்ளடங்கலாக)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 29அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஊகம். 29அ. பிரிவு 27 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்குத் தொடர்பில் மாறானது எண்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய நச்சுத்தன்மைவாய்ந்த, வெடிக்குமியல்புள்ள அல்லது உணர்ச்சி இழக்கச் செய்யும் பதார்த்தம் (டைனமைட் உள்ளடங்கலாக) அல்லது வேறு கெடுதி அல்லது தீங்கு விளைவிக்கும் பண்டம் அல்லது பதார்த்தம் 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உபயோகிக்கப்பட்டதாக, கொண்டுசெல்லப்பட்டதாக அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்டதாக ஊகிக்கப்படல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

பிணையை வழங்கல்.

46அ. இருபத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் அல்லது (ஆ) என்னும் பந்தியின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனுமாளுக்கு நீதிவான் ஒருவரால் எப்பிணையும் அனுமதிக்கப்படுதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 154ரு என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண மேல் நீதிமன்றம், நீதிமன்றத்தைத் திருப்திசெய்யக்கூடிய விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் காண்பிக்கப்படும் போது, 27 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் அல்லது (ஆ) என்னும் பந்தியின் அல்லது (3)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவருக்கு பிணையை அனுமதிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(3) இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல், மூன்று வருடங்களுக்குக் குறையாததும் ஐந்து வருடங்களை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கு இரு வகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணமொன்றுக்கும் அத்துடன் இரண்டாவது அல்லது அதனைத் தொடர்ந்து குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீதும் ஐந்து வருடங்களுக்குக் குறையாதது ஏழு வருடங்களை விஞ்சாதது; மான காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சத்துக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3அ) இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விசாரணையின் பின்னரான குற்றத்தீர்ப்பின்மீது ஒரு வருடத்துக்குக் குறையாததும் மூன்று வருடங்களை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கும் அத்துடன் இரண்டாவது அல்லது அதனைத் தொடர்ந்து குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது மூன்று வருடங்களுக்குக் குறையாததும் ஐந்து வருடங்களை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பணிப்பாளர் தலைமையதிபதியின் அனுமதி"

49அ. பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் தவிர, 27 ஆம் பிரிவின் கீழான தவறொன்று தொடர்பில் குற்றவழக்கெதுவும் தொடங்கப்படுதலாகாது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.